செ.வெ.எண்: 440 நாள்: 06.07.2020

**பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு 1098 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு 1098 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

பெண்குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பெண்குழந்தையை பாதுகாப்பது சமுதாயத்தின் தலையாய கடமையாகும். குழந்தைகளில் ஆண்குழந்தை மற்றும் பெண்குழந்தை சமம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். பெண்குழந்தையை அதிக கவனம் செலுத்தி பாதுகாப்பாக பெற்றோர்கள் பேணி காக்க வேண்டும்.

பெண்குழந்தைகளுக்கு எவ்வித பிரச்சனை ஏற்பட்டாலும் 1098 என்ற எண்ணிற்கு உடனடியாக தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பிற்காக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்பட்டு வருகிறது. இந்த அலகிற்கு குழந்தைகள் சம்பந்தமான புகார்களை தெரிவித்து தீர்வு காணலாம்.

பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறைகளை குறைப்பதற்காக ஆலோசனை வழங்குவதற்காகவும், உதவி செய்வதற்காகவும் மாவட்ட சமூகநல அலுவலக பாதுகாப்பு அலுவலரின் 6383089492 அலைபேசி எண்ணிலோ, குடும்பநல ஆலோசகரின் 9566306500 அலைபேசி எண்ணிலோ, One Stop Centre (OSC) மைய நிர்வாகியின் 9849891308 அலைபேசி எண்ணிலோ மற்றும் முதுநிலை ஆலோசகரின் 9600622046 அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு ஆலோசனை மற்றும் உதவிகள் பெறலாம்.

மேலும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், அங்கன்வாடிப் பணியாளர்களை ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் பகுதிக்கு அருகிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அங்கன்வாடிப் பணியாளர்களின் அலைபேசி எண்களை தொடர்பு கொள்வதற்கு www.icds.tn.nic.in என்ற இணையதளத்தில் Know your DPO/ CDPO/ SUPERVISORS/ AWW என்ற மெனுவை தேர்வு செய்து தங்களது பகுதிக்குட்பட்ட அங்கன்வாடி மைய பணியாளர்களின் அலைபேசி எண்கணை பெற்று தங்களது புகார்களை தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**